# A முதல் பருவ பொது தொகுத்தறித் தேர்வு – 2023

## ஏழாம் வகுப்பு

நேரம்: 2.00 மணி | சமூகஅறிவியல் | மதிப்பெண்கள்:60

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 4x1=4

1. கோவில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் ________ ஆகும்.
   அ) வேளாண்வகை ஆ) சாலபோகம் இ) பிரம்மதேயம் ஈ) தேவதானம்
2. குற்றால நீர்வீழ்ச்சி ________ ஆற்றின் குறுக்காக அமைந்துள்ளது.
   அ) காவிரி ஆ) பெண்ணாறு இ) சிற்றாறு ஈ) வைகை
3. சுவிட்சர்லாந்தில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்ட ஆண்டு
   அ) 1981 ஆ) 1971 இ) 1991 ஈ) 1961
4. தொழில் முனைவோர் ________ எனஅழைக்கப்படுபவர் ?
   அ) பரிமாற்றம் செய்பவர் ஆ) முகவர் இ) அமைப்பாளர் ஈ) தொடர்பாளர்

II கோடிட்ட இடங்களை நிரப்புக: 4x1=4

5. ________ கல்வெட்டு ஒரு பிரம்மதேயக் கிராமத்தின் நிர்வாகம் குறித்து விவரித்துக் கூறுகிறது.
6. ________ குடியிருப்பானது வழிபாட்டுத் தலங்களைச் சுற்றி அமைந்திருக்கும்.
7. எதிர்க்கட்சி தலைவர் ________ அந்தஸ்தில் இருப்பார்.
8. ________ என்பது மனித உற்பத்தியில் ஓர் இடுபொருள்.

III பொருத்துக 4x1=4

9. மதுரை – ஜப்பானிய சொல்
10. சுனாமி – ஆடம் ஸ்மித்
11. வேம்பநாடு ஏரி – பாண்டியர்களின் தலைநகர்
12. நாடுகளின் செல்வம் – காயல்

IV சரியா ? தவறா ? காண். 2x1=2

13. பள்ளிசந்தம் என்பது சமணசமய நிறுவனங்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட நிலமாகும்.
14. 'ராஜபுத்ர' என்பது ஒரு லத்தீன் வார்த்தை ஆகும்.

V பொருந்தாததை வட்டமிடுக 2x1=2

15. மேலோடு, மாக்..., புவிக்கருவம், கவசம்
16. இமயமலை, ஆல்ப்ஸ், ராக்கி, கங்கை

**VI ஓரிரு வார்த்தையில் விடையளி** **4x1=4**

17. 'தகுக்' என்னும் வார்த்தையின் பொருள் யாது ?
18. 'பாலர்' அரச வம்சத்தை நிறுவியவர் யார் ?
19. காசிம் தோற்கடித்த சிந்து மன்னரின் பெயரைக் குறிப்பிடுக.
20. ஆக்ரா நகரை நிர்மாணித்தவர் யார் ?

**VII ஓரிரு வாக்கியங்களில் விடையளி (எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும்) 6x2=12**

21. இடைக்காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த முக்கியமான அயல்நாட்டு பயணிகளின் பெயர்களைக் கூறவும்.
22. 'சகல்கானி' குறித்து சிறுகுறிப்பு வரைக.
23. நிலநடுக்கம் – வரையறு
24. மொழி என்றால் என்ன ?
25. சமத்துவம் என்றால் என்ன ?
26. மூன்று வகை கட்சி முறைகளைக் குறிப்பிடுக.
27. உழைப்பு – வரையறு.

**VIII விரிவான விடையளிக்கவும் (ஏதேனும் நான்கு)** **4x5=20**

28. சிந்துவை அரேபியர் கைப்பற்றியதன் விளைவுகள் யாவை ?
29. சோழர்களின் ஆட்சித்திறம் பற்றிய ஐந்து அம்சங்களை எழுதவும்.
30. நிலநடுக்கத்தின் விளைவுகள் பற்றி எழுதுக.
31. கிராமப்புற குடியிருப்பின் வகைகள் யாவை ? ஏதேனும் மூன்றினைப் பற்றி விரிவாக எழுதவும்.
32. அரசியல் கட்சியின் செயல்பாடுகளில் ஏதேனும் நான்கினை எழுதுக.
33. உற்பத்தியின் வகைகளை விரிவாக எழுதுக.

**IX வேறுபடுத்துக** **1x2=2**

34. சியால் மற்றும் சீமா

35. **காரணம் கூறு.** மும்பை ஒரு பெரிய நகரம் **1x1=1**

**X இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் பகுதிகளை குறிக்கவும்** **5x1=5**

நாளந்தா, கனோஜ், டெல்லி, இராஷ்டிரகூடர்களின் பகுதி, லாகூர்

---